
AHMADI TAMIL CHURCH
ST.PAUL'S CHURCH
KUWAIT
PREPARE TO MEET GOD
பரிசுத்த பவுல் ஆலயம்
குவைத்
அஹமதி தமிழ் திருச்சபை
BY
HIS
WOUNDS
WE ARE
HEALED
செய்தி மலர்
ஏப்ரல்
2025
இதழ் : 25 மலர் : 21








# தேவாதி தேவனை எந்நாளும் பற்றிக்கொண்டு நட!!!

**கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளே, எல்லாம் வல்ல இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். இது வரை நம்மை வழிநடத்தின தேவன் வரும் ஏப்ரல் மாதத்திலும் கூட இருந்து வழி நடத்துவார்.**

**ஆகாய் தீர்க்கதரிசி சொல்கிறார், "சகல ஜாதிகளையும் அசையப்பண்ணுவேன், சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவர் வருவார். இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப்பண்ணுவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்கிறார்" (ஆகா-2:7)**

**இது ஒரு மகிமையான தீர்க்கதரிசனம். இது நிச்சயம் நம் சபையில் நிறைவேறும். நிச்சயமாக நம் ஆலயத்தை மகிமையினால் நிறையப்பண்ணப் போகிறார் விசுவாசிப்போம். அல்லேலூயா.**

**1. சகல ஜாதிகளையும் அசைக்கப்பண்ணுவேன். .....**

**ஏசாயா தீர்க்கதரிசி 53-ம் அதிகாரத்திலே சொல்கிறார் "அவர் தமது ஆத்துமாவின் வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார். என் தாசனாகிய நீதிபரர் தம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார்.**

அவருடைய அக்கிரமங்களை தாமே சுமந்து கொள்வார். அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்தில் ஊற்றி அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு அனேகருடைய பாவத்தை தாமே சுமந்து அக்கிரமக்காரருக்காக வேண்டிக்கொண்டதின் நிமித்தம் அனேகரை அவருக்கு பங்காகக் கொடுப்பேன். பலவான்களை அவர் தமக்கு கொள்ளையாகப் பங்கிட்டுக்கொள்வார். அவர் தமது சந்ததியைக் கண்டு நீடித்த நாளாய் இருப்பார். கர்த்தருக்கு சித்தமானது அவர் கையினால் வாய்க்கும்" (எசாயா–53:10–12)

ஆம் பிரியமானவர்களே, இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையில் சிந்தின இரத்தம் உலகத்திலுள்ள ஜாதிகளையும் அசைக்கப்பண்ணுகிறது. இன்றைக்கும் அனேகர் அந்த இரத்தத்தால் கழுவப்பட்டு நீதிமான்களாக மாறிக்கொண்டிருக்கிறார்கள்.

உலக மக்களுடைய எல்லா முழங்கால்களும் இன்றைக்கு முடங்கிக்கொண்டிருக்கிறது. மனுமக்கள் எல்லாருடைய நாவும் கிறிஸ்துவே இரட்சகர் என்று அறிவிக்கத் தொட்ங்கியிருக்கிறது. ஒரு பெரிய அசைவு உலக மக்களை கவ்விப்பிடித்திருக்கிறது. கோடானு கோடி ஜனக்கூட்டம் இயேசுவின் மந்தைக்குள் வந்து கொண்டேயிருக்கிறது.

இயேசு கிறிஸ்து சிந்தின இரத்தத்தினுடைய தூய்மையும், கிருபையும், பரிசுத்தமும், தியாகமும், அர்ப்பணிப்பும் இதை நிறைவேற்றிக்கொண்டிருக்கிறது. எல்லா மக்களும் பரிசுத்தமடையவும், நித்திய ஜீவனை சுதந்தரிக்கவும் தேவாதி தேவன் ஜாதிகளை அசையப்பண்ணுகிறார். அல்லேலுயா.

"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பில்லை நான் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷருக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவுமில்லை" (அப்–4:12)

## 2.சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவர்......

எவ்வளவு பெரிய ஆளாக இருந்தாலும் இயேசுவின் சிலுவைப் பாடுகளை நோக்கி பார்க்கும் பொழுது உள்ளம் உடைகிறான். அவன் வாழ்வு மாறுகிறது. இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளுகிறான்.

ஆயக்காரனாகிய சகேயுவின் வாழ்க்கை இதற்கு ஒரு உதாராணம்.இயேசுவின் பாதங்கள் அவன் வீட்டில் பட்டவுடனே அவன் சொல்கிறான் ஐயா என் சொத்தில் பாதியை நான் ஏழைகளுக்கு கொடுத்து விடுகிறேன். யாரிடத்திலாவது அநியாயமாய் வாங்கினது உண்டானால் நாலத்தனையாக நான் அதை திரும்பக்கொடுத்துவிடுகிறேன். எனக்கு மனநிம்மதி வேண்டும். அநியாயமாய் சம்பாதித்த வருமாணம் என் நிம்மிதியை குலைக்கிறது என்று சொன்ன போது இயேசு அவனை ஏற்றுக்கொண்டார்.

இன்றைக்கு இந்த வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது. இவனும் ஆபிரகாமுக்கு குமாரனாயிருக்கிறானே? இழந்து போனதை தேடவும், இரட்சிக்கவுமே மனுஷ குமாரன் வந்திருக்கிறார் என்றார். (லூக்-19:1-10)

ஆம் பிரியமானவர்களே, பாவிகளும் துரோகிகளும் முறுமுறுக்கிறவர்களும் ஒழுக்கமில்லாதவர்களும், இயேசுவை நேசித்து அவர் இரத்தத்ததால் கழுவப்பட்டு நீதிமான்களாக மாறுகிறார்கள்.

எல்லா ஜாதிகளும் இயேசுவை விரும்புகிறார்கள், இயேசுவின் நாமம் அப்படிப்பட்டது, இந்த உலகத்திலுள்ள எல்லா ஜாதிகளும் இயேசுவை நேசிக்கிறார்கள்,

யூதர்கள் சொல்கிறார்கள் அவர் ஒரு இஸ்ரேலிய யூதன் என்று, பாலஸ்தீனர்கள் சொல்கிறார்கள் யூதர்கள் இயேசுவை சிலுவையின் அறைந்து கொன்றதினால் இயேசுவை நாங்கள் ஏற்றுக்கொள்ளுகிறோம் என்று, கலிலேய பகுதியிலே அவர் ஊழியம் செய்து அனேக சீடர்களை அந்தப் பகுதியிலே தெரிந்து கொண்டதினால் மீனவர்கள் இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொள்கிறார்கள், சமாரியப் பெண்ணை இரட்சிப்புக்கு ஏதுவாக வழி நடத்தியதால் சமாரியர்கள் இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொள்கிறார்கள், விபசாரம் செய்த பெண்ணையே ஆண்டவர் மன்னித்ததினால் பாவிகள் இன்றைக்கு மனந்திரும்பி கொண்டிருக்கிறார்கள்.

ஆம் பிரியமானவர்களே, உலகத்திலிலுள்ள எல்லா ஜாதியாரும் ஏற்றுக்கொள்ளுகிற ஒரே நபர் இயேசு கிறிஸ்து மாத்திரமே,அவர் அன்பு விலைமதிக்கமுடியாதது.

"அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை போர்களோ? அத்தனை பேர்களும்

தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார். அவர்கள் இரத்தத்தினாலாவது, மாம்ச சித்தத்தினாலாவது, புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல் தேவனாலே பிறந்தவர்கள்.
(யோவான்-1:12,13)

## 3.இந்த ஆலயத்தை மகிமையினால் நிறைப்பவர்....

இயேசுவின் விசுவாசிகள் எங்கெல்லாம் கூடி வருகிறார்களோ? அங்கெல்லாம் இயேசு வருகிறார். அவருடைய நாமத்தின் நிமித்தம் கூடுகிற எல்லா இடத்திலும் ஆண்டவர் பிரசன்னராக இருக்கிறார்.

ஏனெனில் இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார். (மத்-8:20)

நம்முடைய சரீரமே தேவாலயமாயிருக்கிறது காரணம் நம் சரீரத்தில் பரிசுத்த ஆவியானவர் வழிவிலே இயேசு வாசம் செய்வதால் நம்முடைய சரீரத்தையும் தேவன் மகிமையினால் நிரப்புகிறார்.

"நீங்கள் தேவனுடைய ஆலயமாய் இருக்கிறீர்கள் என்றும் தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறார் என்றும் அறியாதிருக்கிறீர்களா"? (1-கொரி-3:16)

ஆம் பிரியமானவர்களே, உலகத்திலுள்ள அனைத்து மனிதரும் தேவனுடைய ஆலயமாகும் தருணம் நெருங்கிக்கொண்டிருக்கிறது. கர்த்தர் தமது மகிமையின் அபிஷேகத்தினால் இன்றைக்கு உலகத்தை நிரப்பிக் கொண்டிருக்கிறார். கடை நிலை மனிதனும் நித்திய ஜீவனை சுதந்தரித்துக்கொள்ள வேண்டுமென்பதே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நம்பிக்கை.

"நித்திய ஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்கு செய்த வாக்குத்தத்தம்" (1-யோவா-2:25)

அதனால் நம்முடைய சரீரத்தை பரிசுத்தமாய்க் காத்துக்கொண்டு தேவ மகிமை நம்மை நிரப்புவதற்கு இடம் கொடுப்போமாக. இதுவே தேவனுடைய சித்தமும் விருப்பமுமாயிருக்கிறது.

"ஒருவன் தேவனுடைய ஆலயத்தை (சரீரத்தை) கெடுத்தால் அவனை தேவன் கெடுப்பார். தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது. நீங்களே அந்த ஆலயம். (1–கொரி–3:17)

கர்த்தர் தாமே நம் ஒவ்வொருவரோடும் இருந்து லெந்து காலங்களில் இன்னும் அதிகமாய் ஆண்டவரை கிட்டி சேர்ந்து சகல ஜாதிகளையும் அசையப்பண்ணுகிற, சகல ஜாதிகளாலும் விரும்பப்பண்ணுகிற தேவாதி தேவனை பற்றிக்கொண்டு அவருடைய மகிமையின் அபிஷேகத்தினால் நிறையப்பட்டவர்களாய் வெற்றியின் வாழ்க்கை வாழ நம்மை அர்ப்பணிப்போமாக.
தேவனுடைய கிருபை உங்களோடு இருப்பாராக.

கிறிஸ்துவின் பணியில்,
உங்கள் அன்பு சகோதரன்
S.ஸ்டாலின்

**சிரி.... சிந்தி**

**உன் மனம் வலிக்கும் போது சிரி.**

**பிறர் மனம்**

**வலிக்கும் போது சிரிக்க வை.**

**– அஹமதி தமிழ் திருச்சபை –**

## CHILDREN THOSE WHO WROTE QUIZ ANSWERS

1. Amish DJ
2. Adriel Kemuel Dhas
3. Andrea Magdalene Dhas
4. Joshua Johnson

# என் நேசரைத் தேடி

இதயக்கதவை தட்டிப்பார்த்தார்
பூட்டிக்கொண்டேனே
திறக்க நானும் நினைத்த போது
மறைந்து போனாரே
வீதியெங்கும் தேடித் தேடி
சோர்ந்து போனேனே
என் ஆத்துமாவில் அமைதியின்றி
இளைத்துப் போனேனே
காவலாளர் என்னைக் கண்டு
காயப்படுத்திடவே
என் போர்வையை என் மேலிருந்து எடுத்துக்கொண்டனரே
வெண்மையும் சிவப்புமான என் நேசரே
வெண்புறாக் கண்கள் கொண்ட மணவாளனே
பதினாயிரம் பேர்களில் சிறந்தவரே
என்பாதைக்கு வெளிச்சமாய் வந்தவரே
தங்க மயமான தலைமகனே
கருமை நிற சுருள்முடி கொண்ட சுந்தரரே
உம்மைத் தேடி ஓடி வருகின்றேன்
நேசரின் திருப்பாதம் காண தவிக்கின்றேன்
அத்தனை இன்பமும் உம்மிடத்தில்
ஏன் அடைக்கலம் உமையின்றி எவ்விடத்தில்...
என்றென்றும் உம்மைத் தேடி..

உங்கள் அன்பு சகோதரி
K.வனிதா

## சகோதரிகள் செய்தி

**நல்ல பங்கு**

"மரியாள் தன்னை விட்டு எடுபடாத நல்ல பங்கை தெரிந்து கொண்டாள்" (லூக்10:41-42)

கிறிஸ்து இயேசுவில் பிரியமான சகோதர, சகோதரிகளே நம் தேவனின் இணையற்ற நாமத்தில் வாழ்த்துகிறேன்.

இன்றைய நாளில் நாம் தியானிக்கும் பகுதி "நல்ல பங்கு" என்பதாகும். நாம் செய்ய வேண்டியது என்ன?

## 1.தேவன் பாதம் அமர்வது

நம் வீட்டினில் விருந்தினர் வரும்போது முதலில் நாம் செய்வது என்ன? ஓடி போய் வரவேற்பதும் உபசரிப்பதும் தான் முதல் வேலை. அப்புறம் தான் மற்ற விஷயங்களைக் கவனிப்போம். ஆனால் இந்த வேதப் பகுதியிலே "இயேசு" லாசரின் வீட்டிற்கு வந்தபோது லாசரின் சகோதரி மார்த்தாள் உணவு சமைக்க சென்றாள். எப்படியாவது நன்றாக சமைத்து இயேசுவின் வாய்க்கு ருசியாக சாப்பாடு தயார் செய்வதில் தன்னை ஈடுபடுத்தி கொண்டாள். இதுவும் நல்ல பங்குதானே...

ஆனால் சகோதரி மரியாளோ... இயேசுவின் பாதம் அமர்ந்து இயேசு கூறுவதை உற்று கவனிக்க ஆரம்பித்தாள். இந்த சம்பவத்தில் இயேசு யாரை பற்றி புகழ்ந்து கூறினார்? மரியாளை குறித்து "தன்னை விட்டு எடுபடாத நல்ல பங்கை தெரிந்து கொண்டாள் என்றும் மார்த்தாளை குறித்து சொல்லும் போது " மார்த்தாளே நீ அநேக உலக காரியங்களை குறித்து கவலைப்படுகிறாய்" என்று கூறுகிறார். ஏன் அவ்வாறு கூறினார்?

மனிதனால் படைக்கப்படுவது தானிய உணவு தேவனின் வாயிலிருந்து வரும் ஒவ்வொரு வார்த்தைகளும் –ஜீவ உணவு. தானிய உணவு உடலை பலப்படுத்துகிறது என்றாலும் அழிவுகுட்பட்டு கழிவாக வெளியேறுகிறது. ஆனால் ஜீவ உணவு ஆத்மாவை பலப்படுத்துகிறது அதற்கு அழிவில்லை. ஜீவ உணவிற்கு முன் தானிய உணவு எம்மாத்திரம்? இதனால் தான் இயேசு லூக்–4–4–ல் மனுஷன் அப்பத்தினால் மட்டுமல்ல தேவனுடைய ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்.

யோவா–6:48,51–ல் ஜீவ அப்பம் நானே இந்த அப்பத்தை புசிக்கிறவன் என்றென்றும் பிழைப்பான் என்று இயேசு கூறுகிறார்.
மார்த்தாள் தேர்ந்து கொண்டதோ? தானிய உணவு மரியாள் தேர்ந்து கொண்டதோ? ஜீவ உணவு. எது நல்ல பங்கு தியானிப்போம்.

## 2.உபவாசித்து ஜெபித்தல்

லூக்–2:36–38–ல் அன்னாள் 84 வயதான ஏழையும், விதவையுமான ஒரு தீர்க்கதரிசியை பார்க்கிறோம். அவள் தேவாலயத்தை விட்டு நீங்காமல் இரவும், பகலும் உபவாசித்து ஜெபம் பண்ணி ஆராதனை செய்து கொண்டிருந்தாள்.

பாருங்கள் அன்னாள் இந்த உலகத்தை நோக்கவில்லை. அதன் ஆடம்பரங்கள் அந்த பெண்மணியை ஈர்க்கவில்லை. அவள் தேர்ந்து கொண்டதோ தேவனின் பாதம் தான்.

உம் பாதம் அமர்ந்து ஆராதிப்பேன்
உம் வசனம் தியானித்து அகமகிழ்வேன்–எந்த
புயல் வந்து மோதினாலும்–நான்
அசைக்கப்படுவதில்லை நான் அசைக்கப்படுவதில்லை.
என்று நாம் பாடுகிறோம்.

இவ்வுலக மாண்பு, வாழ்க்கை ஆடம்பரம் கேளிக்கைகள் எல்லாம் சிறிது காலத்திற்குதான் ஆனால் அவ்வுலக வாழ்வை காண வேண்டுமானால் நாம் தெரிந்து கொள்ள வேண்டியது தேவ சமூகத்தில் உபவாசித்து இடைவிடாமல் தேவனை துதித்து ஆராதனை செய்வதாகும். இதுவே நம் வாழ்வின் நல்ல பங்கு ஆகும்.

## 3.தேவ சந்நிதியில் தாழ்மையுடன் அர்ப்பணித்தல்

புனித லூக்–18:10–14 வசனங்களை கவனமாக படிக்கும் போது இரண்டு மனிதர்கள் ஒருவன் ஆயக்காரன் மற்றொருவன் பரிசேயன் ஜெபம் பண்ணும்படி தேவாலயத்திற்கு செல்கின்றனர். இவர்களில் பரிசேயன் தன்னை மேன்மைப்படுத்தி ஜெபிக்கிறான். "தேவனே பாவியாகிய என் மேல் இரக்கமாயிரும்" என்று தன் மார்பில் அடித்து ஜெபிக்கிறான்.

ஒரு நிமிஷம் சகோதரிகளே, சிந்தித்து பார்ப்போம். தேவன் யாருடைய ஜெபத்திற்கு பதில் கொடுப்பார்? சந்தேகத்திற்கு இடமில்லாமல் ஆயக்காரனின் ஜெபம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. நல்ல பங்கில் பங்கு கொண்டான் ஆயக்காரன்.

சகோதர சகோதரிகளே நாம் வாழும் காலத்தில் தேவ சமூகத்தில் தாழ்மையுடன் அர்ப்பணித்து ஜெபிப்போம். ஒரு நீதிமானாக வாழ்வின் ஓட்டத்தை முடிப்போம். நல்ல பங்கை தேர்ந்தெடுப்போம். ஆமென்.

தேவன் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக.

உங்கள் அன்பு சகோதரி
அனிதா தாஸ்

# இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

**“ உன் பேரை பெருமைப்படுத்துவேன்**
**நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் ( ஆதி-12:2 ) ”**


செல்வி.ஆன்டிரியா மகதலேனா தாஸ்
சகோதரி.விஷ்னுபிரியா சாந்தி
சகோ.திவ்யராஜ்
செல்வன்.ஜெரால்ட் ஜெஸ்டின்
சகோதரி.ஷிஜா கிறிஸ்டோபர்
சகோ.ரிச்சர்ட்சன் டேனியேல்
சகோ.R.சத்தீஷ்
செல்வன். ஆண்டர்சன் பால்அறிவுசுடர்
செல்வன். மதன்ராஜ் மகேஷ்
செல்வன்.ஆபி சுந்தர்
செல்வி.ரிஸ்டி பிரிட்டி ஸ்டீபன்
செல்வி.தயா யாழினி-சுபின்
சகோ.ஜோசப் பாபுராஜ்
சகோதரி.செல்வ மேரி குனா ஆனந்
சகோ.ஜெய்சாம் டேனியேல்
சுகோ.சுகமாரன
செல்வி.ஜோயன் ஜப்ரீனா
செல்வி.ஹப்ரீனா
சகோ.பென்சாம்
செல்வி.கிறிஸ்டினா-வினீஷ்
சகோ. வேதா ஜெபர்சன்
சகோ.குமாரசாமி
சகோதரி. கலாராணி ஜெயக்குமார்
செல்வி.சாரா ஸ்டாலின் சுனில்
சகோதரி.ஜெஸ்லெட் வர்கீஸ்

சகோ.ஜீவல் சிங்
சகோ.பால் ஜெகநாதன்
சகோதரி.நிஷாந்தி விஜயன்
சகோதரி.பத்மினி வர்கீஸ்
சகோ.ரவிஜான்பீட்டர்
சகோதரி.தாரனி பீட்டர் ராமச்சந்திரன
செல்வி.ரெபொக்கா ஷாலினி
செல்வி ரெவிகா.பிரசாத்
செல்வி.வின்சி டேவிட்
செல்வன். விமல் டேவிட்
செல்வன்.ஆஸ்ரே டாஸ்வின் தினேஷ்
சகோதரி.அனிதா சுனில்
செல்வன் ரான்கின் ஜுனு
செல்வி.குமாரீ ராஜன்
சகோ.எட்வர்ட் சந்தோஷ்
சகோதரி.ரீனி ரேச்சல்
செல்வி.ஷாரோன் கீர்த்தனா கிறிஸ்டோபர்
சகோ.சாலமோன் முருகன்
சகோதரி.விஜயகுமாரி சுந்தர்ராஜ்
செல்வி.சோனி மேரி வேளாங்கண்ணி
செல்வி.இபிஜா ஜெயக்குமார்
சகோ.மகேஷ்ராஜ்
செல்வி.ஹன்சிகா சாம் ஆனந்த்
செல்வி.ஹேனா ஜோன் வினீஷ்




# இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

**கர்த்தர் உனக்கும் உன் இளவயதின் மனைவிக்கும்**
**சாட்சியாயிருக்கிறார் (மல்கியா 2:14)**



திருமதி / திரு. குனா ஆனந்த் செல்வ மேரி
திருமதி / திரு. ஜீவல் சிங்-ஷீபா
திருமதி / திரு. .ஸ்டிபன்-மரகதம்
திருமதி.திரு.அருண் இம்மானுவேல் -ஷீபா
திருமதி.திரு பால் டேனியேல்-அனுபா



# 2025 – ஏப்ரல் மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:30 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 06/4/2025 | பாஸ்டர். ஜார்ஜ் ஸ்டீபன்சன் – Flock Minitries | |
| 13/4/2025 | குறுத்தோலை ஞாயிறு ஆராதனை | |
| 20/4/2025 | உயிர்த்தெழுந்த ஞாயிறு ஆரதாளை | |
| 27/4/2025 | சகோ. சுகுமார் | சகோ.ஸ்டாலின் |

## வெள்ளி ஆராதனை மாலை 4:00 முதல் 6:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 04-4-2025 | பாஸ்டர். ஜார்ஜ் ஸ்டீபன்சன் – Flock Minitries | |
| 11/4/2025 | பாஸ்டர். ஜார்ஜ் ஸ்டீபன்சன் – Flock Minitries | |
| 18/4/2025 | புனித வெள்ளி ஆராதனை | |
| 25/4/2025 | சகோ. ரவி ஜான் பீட்டர் | சகோ.ஸ்டாலின் |

## ஆராதனை ஒழுங்குகள்

03/4/2025 சங்கிலித்தொடர் ஜெபம் மாலை 6:00 முதல் காலை 6:00 மணிவரை

10/4/2025 அன்று முழு இரவு ஜெப ஆராதனை
இடம் – பாஹீலில் ஜெப வீடு – நேரம்– இரவு 10:00 முதல் அதிகாலை 1:00 மணிவரை

17/4/2025 அன்று வியாகுல வியாழன் ஆராதனை
இடம் – பாஹீலில் ஜெப வீடு – நேரம் - 6:30 PM-8:30

25/4/2025 அன்று வாலிபர் ஐக்கிய கூடுகை
இடம் – பாஹீலில் ஜெப வீடு – நேரம் - 6:30 PM-8:30

26/4/2025 அன்று சகோதரிகள் ஐக்கிய கூடுகை
இடம் – பாஹீலில் ஜெப வீடு –நேரம் –6:30 PM– 8:30 வேத வினா பகுதி – ரோமர்

**செவ்வாய்கிழமை**
குடும்ப ஆசீர்வாத ஜெப கூடுகை
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 6:30 முதல் 8:00 வரை


**வியாழக்கிழமை**
பாடல் பயிற்சி கூடுகை
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 6:30 முதல் 8:00 வரை

**சனிக்கிழமை**
சிறுவர் வேதாகம பள்ளி
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 3:30 முதல் 5:00 வரை

**திங்கட்கிழமை**
பெண்கள் ஐக்கிய ஜெப கூடுகை
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

# 2025 ஏப்ரல் மாதத்திற்கான வேத வினா!

**கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்**



1. மோசேயின் பிள்ளைகள் எத்தனை பேர்? அவர்கள் பெயர்கள் என்ன?
2. லாபான் யாக்கோபின் சம்பளத்தை எத்தனைமுறை மாற்றினான்?
3. கர்த்தர் மோசேக்கு நியாயபிரமாணத்தை எந்த மலையில் கொடுத்தார்?
4. கர்த்தர் யோசேப்பினிமித்தம் எந்த எகிப்தியன் வீட்டை ஆசீர்வதித்தார்?
5. மோசேயின் மாமன் எந்த தேசத்தான்?
6. யோசேப்பு தன் சகோதரர்களுக்கு தன்னை வெளிப்படுத்திய பொழுது பாசத்தின் மிகுதியால் என்ன செய்தான்?
7. பார்வோனிடம் பேசும்போது மோசே மற்றும் ஆரோனின் வயது என்ன?
8. நோவா காலத்தில் பூமி அழிக்கப்படும்போது எத்தனை நாட்கள் மழை பெய்தது?
9. மன்னாவை தலைக்கு எந்த அளவு எடுத்துக்கொள்ளும்படி தேவன் கட்டளை யிட்டார்?
10. ரெபெக்காளை அவள் சகோதரர்கள் எப்படியாய் வாழ்த்தினார்கள்?
11. மோசேயிடம் கர்த்தர் தம்முடைய பெயரை எப்படி குறிப்பிட்டார்?
12. உடன்படிக்கை பெட்டி எந்த மரத்தால் செய்யப்பட்டது? அதன் அளவுகள் என்ன?
13. யோசேப்புக்கு பார்வோன் கொடுத்த பதவியின் பெயரென்ன?
14. எபிரேய ஆண் குழந்தைகளைக் கொல்லாமல் உயிரோடே காப்பாற்றியது யார்?
15. ஆபிரகாம் எந்த தேசத்தில் அநேக நாள் தங்கியிருந்தான்?

**விடைகளை வருகின்ற 21-04-2025 க்குள்**
**(WhatsApp - +965 66159784 ) என்ற எண்ணுக்கு பெயருடன் குறிப்பிட்டு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். வேதாகமத்தில்**
**“யாத்திராகமம் ”**

**...தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; – மத்தேயு 7:7**

# 2025 - மார்ச்மாத வேத வினாவுக்கு விடை

| | |
|---|---|
| 1. பவுல் | – ரோமர் 12:12 |
| 2. பாவம் | – ரோமர் 14:23 |
| 3 ஆபிரகாம் | – ரோமர் 4:21 |
| 4. கிறிஸ்து | – ரோமர் 5:6 |
| 5. பவுல் | – ரோமர் 12:10 |
| 6. பெர்சியால் | – ரோமர் 16:12 |
| 7. ரோமர் 1:24 | – ரோமர் 1:24 |
| 8. ரோமர் 1:28 | – ரோமர் 1:28 |
| 9. ரோமர் 12:9 | – ரோமர் 12:9 |
| 10. பவுல் | – ரோமர் 9:1 |
| 11. ஆபிரகாம் | – ரோமர் 4:21 |
| 12. ரோமர் 11:26 | – ரோமர் 11:26 |
| 13. ரோமர் 1:2 | – ரோமர் 1:2 |
| 14. ரோமர் 11:14 | – ரோமர் 11:14 |
| 15. பவுல் | – ரோமர் 12:12 |


## 2025- பிப்ரவரி வேத வினாவுக்கு

## பதில் எழுதியவர்கள்

Sis.வனிதா
Sis.நகோமி ஜான்சன்
Sis. ஜீனா சதீஸ்குமார்
Sis. பத்மினி வர்க்கீஸ்
Sis. பிரிசில்லா செங்குட்டுவன்
Sis.சுகந்தி தம்புகுமார்
Sis.ஜான்சி ராணி
Sis.மரிய குளோரி தாஸ்

Sis.ஜெஸ்லட்
Sis.நித்யா ஜோன்ஸ்
Sis. சாந்தி
Sis. சுபா ஸ்டீபன்
Sis. தயா இயேசுரத்தினம்
Bro. எபினேசர்
Bro. செங்குட்டுவன்
Bro. ஜான்சன்

வேத வினா பதில் எழுதிய உங்கள் அனைவருக்கும் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்



# April Month Quiz for Children

(Write the answers using the New King James Version. Children those who are studying above SECOND Standard can participate)

1. What did the angel of God tell Joseph to name the Virgin's son?
2. Which prophet told about the weeping due to the death of the children?
3. Who preached in the wilderness of Judea?
4. Why are the pure in the heart blessed?
5. Why did Jesus marvel?
6. What is the name of the tax collector who became the disciple of Jesus?
7. Which is the light of the body?
8. For whom does Jesus give rest?
9. Who shall be in the heart of the earth for 3 days and nights?
10. Which disciple walked on the water?

Note:- ANSWERS can be taken from **Matthew 1 to 14.** Submit your answers to the Sunday School Teachers on or before 22.04.2025 Please mention the reference along with the answers.

## *Answer for the children Quiz(March)*

1. Honor thy father and mother - Matt 15:4
2. Peter - Matt 16:18
3. Lost - Matt 18:11
4. Peter,James and john his brother - Matt 17:1
5. John - Matt 21:32
6. As a grain of mustard seed - Matt 17:20
7. God - Matt 19:17
8. Caesar's - Matt 22:21
9. Mary Magdalene and the other Mary- Matt 28:1
10. Mount of Olives - Matt 24:3

# யாரைத் தேடுகிறாய்?

**2-நாளா-26:5 அவன் கர்த்தரை தேடின நாட்களில் தேவன் அவன் காரியங்களை வாய்க்க செய்தார்.**

நம் வாழ்க்கையில் நாம் ஒன்றுமே இல்லாமல் இருந்தபோது நம்மைத் தேடி வந்தவர் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து. நாம் அவரைத் தேடவில்லை. அவரே நம்மை தேடி வந்தார். இப்போதும் தேடுகிறார்.

**சங்கீ-14:2 தேவனைத் தேடுகிற உணர்வுள்ளவன் உண்டோ என்று பார்க்க கர்த்தர் பரலோகத்தில் இருந்து மனுபுத்திரரை கண்ணோக்கினார்.**

அவர் நம்மைத் தேடும்போது மனிதனை படைத்ததற்காக அவர் மனஸ்தாபபடுகிறார். ஏனெனில் எல்லாரும் வழிவிலகி ஏகமாய் கெட்டுப்போகிறார்களே அன்றி நன்மை செய்கிறவன் ஒருவனும் இல்லை. நமக்காக இப்பூமிக்கு வந்து வாழ்ந்து மரித்து இன்றும் நம்மோடு கூட வாழ்ந்து கொண்டிருக்கும் நம் தேவனை தேடாமல் உலக இன்பங்களில் பின்னால் அதிகமாய் கவனம் செலுத்தி ஒவ்வொரு நாளும் நம் ஆண்டவரை சிலுவையில் அறைந்து கொண்டிருக்கிறோம். யாரை விழுங்கலாம் என்று சத்துருவானவன் வகைத் தேடிக் கொண்டிருக்கும்போது இப்போதாவது என்னைத் தேடி வரமாட்டாயா? என்று இருகரங்களை விரித்தபடி நமக்காக நீடிய பொறுமையோடு காத்திருக்கிறார்.

**1-நாளா 16:10 கர்த்தரை தேடுகிறவர்களின் இருதயம் மகிழ்வதாக என்று சொல்லப்பட்டிருக்கிறது.**

நம் வாழ்க்கையில் அனுதினமும் அவரைத் தேடும்பொழுது மகிழ்ச்சியும் சமாதானமும் காணப்படுவதை நம்மால் உணர முடியும். இந்த உலகத்தில் காணப்படுகிற அனைத்து இன்பங்களும் மாயையே எல்லாம் ஒருநாள் அழிந்து போம். ஆனால் நேற்றும் இன்றும் என்றும் மாறாத நம் ஆண்டவராகிய கர்த்தர் இம்மையிலும் மறுமையிலும் நம்மோடு கூட இருக்கிறார்.

**பிரசங்கி-7:29 இதோ, தேவன் மனுஷனை செம்மையானவனாக உண்டாக்கினார். அவர்களோ அநேக உபாயதந்திரங்களை தேடிக்கொண்டார்கள்.**

நாம் தேவனை துதிப்பதற்காகவும் ஆராதிப்பதற்க்கவும் சுவிஷேசங்களை அறிவிப்பதற்க்காவும் நம்மை உண்டாக்கினார். ஆனால் நாம் பாவ சேற்றில் விழுந்து பிசாசின் தந்திரங்களில் சிக்கிக்கொண்டு அவற்றில் இருந்து வெளிவர மனதில்லாமல் தேவனை முழு இருதயத்தோடு தேடக்கூடிய உணர்வில்லாமல் பெயருக்கு மட்டும் கிறிஸ்தவனாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

பிரசங்கி-12:1 "நீ உன் வாலிபப்பிரயாத்திலே உன் சிருஷ்டிகரை நினை" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இளவயதும் வாலிபமும் மாயையே, ஆவி தேவனிடத்திற்கு திரும்புவதற்கு முன்னும் உன் வாலிப பிராயத்திலே அவரை நினை.

கர்த்தர் நம் வாழ்க்கையில் பெரிய காரியங்களைச் செய்வார். முதிர்வயதுள்ளவரை காத்து வழி நடத்துவார். நான் அவரைத் தேடுகிறேன். அவருக்காக காத்திருக்கிறேன். அவர் வரும்போது அவரை கண்டடைவேன்.

உன்னதப்பாட்டு 2:16 "என் நேசர் என்னுடையவர், நான் அவருடையவள்" என்ற சிந்தையோடு அவருக்காக வாழ்வோம். அவரே நமக்கு அரண். கர்த்தரை விட்டு விலகுகிறவர்கள் நிர்மூலமாவார்கள் என்று ஏசாயா-1:28-ல் வாசிக்கிறோம். அவர் நம்மை விட்டு விலகுவதில்லை என்று வாக்கு கொடுத்திருக்கிறார். அவர் பிள்ளைகளாகிய நாமும் அவர் கற்பனைகளைக் கைக்கொண்டு அவர் வழியிலே அவருக்காக நடப்போம்.

கர்த்தர் நாமம் மகிமைப்படுவராக.

**வாலிபம் இயேசுவுக்கே..**

## ஒன் மினிட் ப்லீஸ்

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதர சகோதரிகளுக்கு !

தாங்கள் இந்திய தேச மிஷனரிகளை தாங்கும் ஊழியத்திற்கு பொருத்தனை செய்திருந்தால், தங்களது காணிக்கைகளை சகோ.கிறிஸ்டோபர் அவர்களிடத்திலும்

திக்கற்ற பிள்ளைகளின் ஊழியத்திற்கென்று பொருத்தனை செய்திருந்தால் தங்களது காணிக்கைகளை சகோ. பிராங்கிளின் அவர்களிடத்திலும்,

போக்குவரத்து ஊழியத்துக்கென்று கொடுக்கிறவர்கள் தங்கள் காணிக்கைகளை சகோ. கிரண் அவர்களிடத்திலும்,

ஆலயம் கட்டுமான ஊழியத்துக்கென்று கொடுக்கிறவர்கள் தங்கள் காணிக்கைகளை சகோ. ஜெகநாதன் அவர்களிடத்திலும் கொடுத்து, ஊழியத்தை தாங்கமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

# Kids Corner



**VBS ACTIVITY**

# VBS ACTIVITY






# கடந்த மாத நிகழ்வுள் சில





























# ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்

# செயற்குழு உறுப்பினர்கள்

## முதன்மை ஊழியர்

**Bro.S.ஸ்டாலின்**

Ph.66021072 - 96760452

## செயலாளர்

**Bro.S.சுகுமார்**

Ph.99837646

## பொருளாளர்

**Bro.S.சிவக்குமார்**

Ph.97224276

### பெண்கள் ஐக்கிய தலைவி

**Sis.செலின் டேவிட்**

Ph.65967170

### வாலிப ஐக்கிய தலைவர்

**Bro.சுபின்சிங்**

Ph.65197164

Follow us Social Media Youtube & Facebook - ATC TAMIL

Church e-mail ID- ahmaditamil.kw@hotmail.com

Church Website Address - ahmaditamilchurch.com

தங்களது
ஜெப விண்ணப்பங்கள்
எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்க
ஒரு குழு ஆயத்தமாய்
இருக்கிறது.

Church Postal Address
Your Name
PO.Box No: 46795,
Fahaheel, 64018,
Kuwait

*Private Circulation Only*